VETRI

வள்ளலார் வாக்கில் கடவுளிடம் வேண்டுவன

சன்மார்க்கம் அறிவோம் - பாடம் 6

தொகுப்பு

முனைவர் வை. நமசிவாயம், VETRI

வெளியீடு

வள்ளலார் யூனிவர்சல் மிஷன், U.S.A

மற்றும்

வள்ளலார் கல்விப் பயிற்சி ஆராய்ச்சி நிறுவனம், வடலூர் (VETRI)

Contents

வள்ளலார் வாக்கில் கடவுளிடம் வேண்டுவன 3

1. பண்டைத் தமிழர் கடவுளிடம் அன்பும் அறமும் அருளும் வேண்டினர் 3
2. வள்ளலார் வேண்டுவன ஆறு 3
3. வள்ளலார் ஆண்டவரிடம் அடியார்கள் வேண்டுவன இவை எனக் கூறி அன்பர்களுக்கு வழிகாட்டுதல் 4

4. அடியார் இவற்றைப் பெறுவதற்குரிய தகுதி யாது? 5

4.1 உட்பகைவர் அறுவராலும் கொலை எனும் பாதகத்தாலும் பற்றப்படா நிலை 5

5. மரணமில்லாப் பெருவாழ்வுக்குரியனவற்றை இறைவனிடம் வேண்டுதல் .. 7

இராமலிங்காய நம

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

வள்ளலார் வாக்கில் கடவுளிடம் வேண்டுவன

1. பண்டைத் தமிழர் கடவுளிடம் அன்பும் அறமும் அருளும் வேண்டினர்

...யாம் இரப்பவை

பொருளும் பொன்னும் போகமுமல்ல நின்பால்

அருளும் அன்பும் அறனு மூன்றும்

உருளிணர்க் கடம்பின் ஒலிதா ரோயே

- **கடுவனிளவெயினனார் (பரிபாடல்; 5 : 78-81)**

2. வள்ளலார் வேண்டுவன ஆறு

1. நீங்காத செல்வம்
2. நல் அருள்
3. அன்பு
4. சிறப்பு
5. நிலையான உடம்பு
6. மகிழ்ச்சியான வாழ்வு

#6-110-054 ஆறாம் திருமுறை / தனித் திருஅலங்கல்

திருநி லைத்துநல் அருளொடும் அன்பொடும் சிறப்பொடும்
செழித்தோங்க
உருநி லைத்திவண் மகிழ்வொடு வாழ்வுற உவந்துநின் அருள்செய்வாய்
இருநி லத்தவர் இன்புறத் திருவருள் இயல்வடி வொடுமன்றில்
குருநி லைத்தசற் குருஎனும் இறைவநின் குரைகழற் பதம்போற்றி.

3. வள்ளலார் ஆண்டவரிடம் அடியார்கள் வேண்டுவன இவை எனக் கூறி அன்பர்களுக்கு வழிகாட்டுதல்

- **1. பொய்யாத மொழி**
- **2. மயல் செய்யாத செயல்**
- **3. வீண் போகாத நாள்**
- **4. விடயம் புரியாத மனம்**
- **5. உள் பிரியாத சாந்தம்**
- **6. புத்தி தளராத நிலை**
- **7. எய்யாத வாழ்வு**
- **8. வேறு எண்ணாத நிறைவு**
- **9. நினை என்றும் மறவாத நெறி**
- **10. இறவாத தகவு**
- **11. மேற் பிறவாத கதி**

#2-100-04 இரண்டாம் திருமுறை / அம்மை திருப்பதிகம்

பொய்யாத மொழியும்மயல் செய்யாத செயலும்வீண்
போகாத நாளும் விடயம்
புரியாத மனமும்உட் பிரியாத சாந்தமும்
புந்திதள ராத நிலையும்
எய்யாத வாழ்வும்வே றெண்ணாத நிறைவும்நினை
என்றும்மற வாத நெறியும்
இறவாத தகவும்மேற் பிறவாத கதியும்இவ்
ஏழையேற் கருள்செய் கண்டாய்

கொய்யாது குவியாது குமையாது மணம்வீசு
கோமளத் தெய்வ மலரே
கோவாத முத்தமே குறையாத மதியமே
கோடாத மணி விளக்கே
ஐயான னம்கொண்ட தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்டமும் சராசரமும் ஈன் றருள்பரசி
வானந்த வல்லி உமையே.

- விடயம் = புலன்கள்
- எய்யா(த)மை = முயலாமலே, உடலை வருத்தாமல்
- நிறைவு = திருப்தி = திருத்தி = அமைவு "செல்வம் என்பது சிந்தை நிறைவு"
- சாந்தம் = அமைதி
- புந்தி = புத்தி / அறிவு

4. அடியார் இவற்றைப் பெறுவதற்குரிய தகுதி யாது?

4.1 உட்பகைவர் அறுவராலும் கொலை எனும் பாதகத்தாலும் பற்றப்படா நிலை

1. காமம் = பேராசை
2. கோபம் = வெகுளி
3. லோபம் = கடும்பற்று
4. மோகம் = ஒன்றை அகப்படுத்த எழும் எண்ணம்
5. மதம் = செருக்கு
6. மாச்சரியம் = பொறாமை, பகைமை
7. கொலை = பிற உடம்புகளினின்றும் உயிரை நீக்குதல்

#5-052-06 ஐந்தாம் திருமுறை / தெய்வமணி மாலை

காமஉட் பகைவனும் கோபவெங் கொடியனும்
கனலோப முழுமூடனும்
கடுமோக வீணனும் கொடுமதம் எனுந்துட்ட
கண்கெட்ட ஆங்காரியும்

ஏமம்அறு மாச்சரிய விழலனும் கொலைஎன்
றியம்புபா தகனுமாம்இவ்
வெழுவரும் இவர்க்குற்ற உறவான பேர்களும்
எனைப்பற்றி டாமல்அருள்வாய்
சேமமிகு மாமறையின் ஓம்எனும் அருட்பதத்
திறன்அருளி மலயமுனிவன்
சிந்தனையின் வந்தனைஉ வந்தமெய்ஞ் ஞானசிவ
தேசிக சிகாரத்னமே
தாமம்ஒளிர் சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

4.2 தீதெல்லாம் நீக்கி நற்பண்புகளை தந்து திருவடிக்கு ஆளாக்குவாய் என வேண்டுதல்

நற்பண்புகள்

1. இரத்தலில்லா இயல்பு
2. இல்லை என்னாது இடுதல்
3. இறைவனால் கை விடப்படா நிலை
4. உள்ளத்தில் இறைவனை மறவாத நெறி
5. பிறர் செல்வம் விரும்பாமை
6. மெய் நிலையினின்றும் கீழிறங்காத உறுதிப்பாடு
7. தீய சொற்களைக் கூறாதிருத்தல்
8. உறுதியான வாய்மை
9. தூய்மை

#5-052-09 ஐந்தாம் திருமுறை / தெய்வமணி மாலை

ஈஎன்று நான்ஒருவர் இடம்நின்று கேளாத
இயல்பும்என் னிடம்ஒருவர்ஈ
திடுஎன்ற போதவர்க் கிலைஎன்று சொல்லாமல்
இடுகின்ற திறமும்இறையாம்
நீஎன்றும் எனைவிடா நிலையும்நான் என்றும்உள்

நினைவிடா நெறியும்அயலார்
நிதிஒன்றும் நயவாத மனமும்மெய்ந் நிலைநின்று
நெகிழாத திடமும்உலகில்
சீஎன்று பேய்என்று நாய்என்று பிறர் தமைத்
தீங்குசொல் லாததெளிவும்
திரம்ஒன்று வாய்மையும் தூய்மையும் தந்துநின்
திருவடிக் காளாக்குவாய்
தாய்ஒன்று சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

- வாய்மை = எவர்க்கும் தீங்கு செய்யாத சொற்களை கூறுதல்
- தூய்மை = மனந்தூயதாதல் = மெய் உணர்தல்

5. மரணமில்லாப் பெருவாழ்வுக்குரியனவற்றை இறைவனிடம் வேண்டுதல்

- 1. நிராசை
- 2. சாந்தம்
- 3. பிறர்க்கு உதவும் பண்பு
- 4. மயக்கம் நீக்கும் அறிவு
- 5. ஆங்காரமின்மை
- 6. சுத்த மனம்
- 7. அருள் நிலையில் தங்குதல்

#5-052-07 ஐந்தாம் திருமுறை / தெய்வமணி மாலை

நிலைஉறும் நிராசையாம் உயர்குலப் பெண்டிரொடு
நிகழ்சாந்த மாம்புதல்வனும்
நெறிபெறும் உதாரகுணம் என்னும்நற் பொருளும்மருள்
நீக்கும்அறி வாம்துணைவனும்
மலைவறு நிராங்கார நண்பனும் சுத்தமுறு
மனம்என்னும் நல்ஏவலும்

வருசகல கேவலம்இ லாதஇட மும்பெற்று
வாழ்கின்ற வாழ்வருளுவாய்
அலைஇலாச் சிவஞான வாரியே ஆனந்த
அமுதமே குமுதமலர்வாய்
அணிகொள்பொற் கொடிபசுங் கொடிஇரு புறம்படர்ந்
தழகுபெற வருபொன்மலையே
தலைவர்புகழ் சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

குறிப்பு:

1. **தெய்வமணிமாலை அன்பர் ஒருவர் வேண்டுகோளை ஏற்று வள்ளல் பெருமானால் இயற்றப்பட்டது**

2. **சத்திய பெரு விண்ணப்பத்திலுள்ள "ஜீவர்களாற் கணித்தறியப்படாத..... துதிப்பேன்!" என்னும் பகுதியில் ஆறு குற்றங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன**

சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெரு விண்ணப்பம்

சுத்த சன்மார்க்க லக்ஷிய சத்திய ஞானக் கடவுளே! ஜீவர்களாற் கணித்தறியப்படாத பெரிய உலகின்கண்ணே, பேராசை பெருங்கோபம் பெருமோகம் பெருமதம் பெருலோபம் பேரழுக்காறு பேரகங்காரம் பெருவயிரம் பெருமடம் பெருமயக்கம் முதலிய பெருங்குற்றங்களே பெரும்பாலும் விளைவதற்குரிமையாகிய மற்றை இடங்களிற் பிறப்பியாமல், குணங்களே பெரும்பாலும் விளைவதற்குரிமையாகிய இவ்விடத்தே, உறுப்பில் குறைவுபடாத உயர் பிறப்பாகிய இம்மனிதப் பிறப்பில் என்னை பிறப்பித்தருளிய தேவரீரது பேரருட் பெருங்கருணைத் திறத்தை என்னென்று கருதி என்னென்று துதிப்பேன்!

- **இவை "ஆகாயம்" எனும் தத்துவத்தின் காரியம் (தாத்துவிகம்)**
- **தத்துவம் 36 அவற்றின் காரியம் 60**
- **நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்தும் அவை ஒவ்வொன்றின் ஐந்து காரியங்களும் (5x5) தத்துவங்கள் ஆகும்**

- தத்துவம் மட்டுமே குறிக்கப்பட்டாலும் தாத்துவிகமாகிய காரியமும் கருதப்படும்

3. கடவுள் மாயையின் காரியமாகிய தத்துவங்களை கடந்தவர். தகுதியுடைய அருளாளர்கட்கு கடவுள் தத்துவங்களின் இயல்பை தெரிவித்து அவற்றைக் கடக்க அருள் செய்கிறார்.

ஏறா நிலைமிசை ஏற்றிஎன் தனக்கே
ஆறாறு காட்டிய அருட்பெருஞ் ஜோதி - (அகவல் 17-18)

ஏறா நிலைநடு ஏற்றி என்றனை ஈண்டு
ஆறாறு கடத்திய அருட்பெருஞ் ஜோதி - (அகவல் 311-312)

- தத்துவம் கடந்த நிலையில் கடவுள் விளங்குகின்றார்

6-003-7. அருட்பெருஞ்சோதி அட்டகம்

தத்துவம் அனைத்தும் தனித்தனி கடந்தேம்
தத்துவா தீத மேல் நிலையில்
சித்தியல் முழுதும் தெரிந்தனம் அவைமேல்
சிவநிலை தெரிந்திடச் சென்றேம்
ஒத்தஅந் நிலைக்கண் யாமும் எம் உணர்வும்
ஒருங்குறக் கரைந்து போயினம் என்
றத்தகை உணர்ந்தோர் வழுத்த நின் றோங்கும்
அருட்பெருஞ் சோதிஎன் அரசே.

4. சகல கேவலம் இலாத இடம் = ஆன்மா தனிமை நிலை (கேவலம்). உடம்பொடு கூடிய நிலை (சகலம்) இன்றி சுத்த நிலையில் பதி வாழ்வடைதல்

#2-078-03 இரண்டாம் திருமுறை / குஞ்சிதபாதப் பதிகம்

வேதநெறி புகல் சகல கேவலம் இலாத பர
வெளி கண்டுகொண்டு கண்ட
விளைவின்றி நான்இன்றி வெளிஇன்றி வெளியாய்
விளங்குநாள் என்றருளுவாய்

#5-052-22 ஐந்தாம் திருமுறை / தெய்வமணி மாலை

மனமான ஒருசிறுவன் மதியான குருவையும்
மதித்திடான் நின் அடிச்சீர்
மகிழ்கல்வி கற்றிடான் சும்மா இரான் காம
மடுவினிடை வீழ்ந்து சுழல்வான்
சினமான வெஞ்சுரத் துழலுவன் உலோபமாம்
சிறுகுகையி னூடுபுகுவான்
செறுமோக இருளிடைச் செல்குவான் மதம்எனும்
செய்குன்றில் ஏறிவிழுவான்
இனமான மாச்சரிய வெங்குழியின் உள்ளே
இறங்குவான் சிறிதும்அந்தோ
என்சொல் கேளான் எனது கைப்படான் மற்றிதற்
கேழையேன் என்செய்குவேன்
தனநீடு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

கரண ஒழுக்கம்

கரண ஒழுக்கமாவது:

- மனத்தைச் சிற்சபை என்னும் அறிவாகிருதி ஆக்கல்;
- இதன் பூர்வத்தில் புருவமத்தியில் நிற்கச்செய்தல்.
- இதன்றி துர்விஷயத்தைப் பற்றாதிருக்கச் செய்தல்;
- சீவதோஷம் விசாரியா திருத்தல்;
- தன்மதிப்பில்லாதிருத்தல்;
- இராகாதி நீக்கி இயற்கைச் சத்துவ மயமாதல்,
- தனது தத்துவங்களை அக்கிரமத்திற் செல்லாது கண்டித்தல்.

கரண ஒழுக்கமாவது:

- உண்மையான கடவுள் ஒருவரே என்று சத்திய சங்கல்பம் கொள்ளல்;
- சிற்சபையின்கண் மனஞ் செல்லுவது தவிர, வேறு எந்தவகை ஆபாசத்திலும் செல்லாமல் அதை இழுத்து மேற்குறித்த இடத்தில், அதாவது, கடவுளிடத்தில் நிறுத்துவது;

- பிறர்குற்றம் விசாரியாது இருத்தல்;
- தன்னை மதியாதிருத்தல்,
- செயற்கைக் குணங்களா லுண்டாகிய கெடுதிகளை நீக்கி இயற்கையாகிய சத்துவமயமாக நிற்றல்;
- பிறர்மேல் கோபியா திருத்தல்;
- தனது சத்துருக்களாகிய தத்துவங்கள் - அரிஷ்டவர்க்கங்கள் - மேல் கோபித்தல்;
- அக்கிரம அதிக்கிரமப் புணர்ச்சி செய்யாதிருத்தல்

முதலிய இவற்றையே கரண ஒழுக்க மென்பர்.

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

திருவருட் பிரகாச வள்ளலார் திவ்ய திருவடிகளே சரணம் ! சரணம் ! சரணம் !

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க !
வள்ளல் மலரடி வாழ்க வாழ்க !